# AN ANALYSIS ON LACAN'S CONCEPT OF SELF

# லக்கானுடைய சுயம் பற்றிய கருத்தாக்கம் - ஒரு பகுப்பாய்வு

**M. L. Issadeen, A. Shafra**
Department of Social Sciences
South Eastern University of Srilanka
issadeen1968@gmail.com, akramshafra04@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

உளவியல் அறிஞரான ஜாக்ஸ் லக்கான் (1901-1981) முன்வைத்த 'மனிதத் தன்னிலை' எனும் 'சுயம்' பற்றியதான கருத்து உளவியலை இன்னுமொரு கட்டத்திதிற்கு நகர்த்தியிருப்பதாக உளவியலாளர்கள் கருதுவர். ஓவ்வொரு மனிதனும் பிறப்பதற்கு முன்னரே மொழியும் மற்றவையும் தனிப்பட்ட மனித சுயத்தைக் கட்டமைப்பதற்கு தயாராக இருக்கின்றன. அவன் பிறந்தவுடன் அவனுடைய ஊடாட்டம் மற்றையவற்றுடன்தான் தொடங்குகிறது. அந்தவகையில் தாய் அவனுடைய முதல் மற்றமையாகும். பிறவற்றுடனான அவனுடைய முதலனுபவமே மொழித் தன்மை கொண்டது. இது புரிதலுக்கு முற்கோளாக மொழியிருப்பதைக் குறிக்கிறது. மொழி தன்னை மற்றையவையிலிருந்துத னியான ஒன்றாக (சுயத்தைக்) கட்டமைப்பதற்கு உறுதுணையாக உள்ளது. இவ்வாய்வு சுயம் கட்டமைக்கப்படுவதிலுள்ள இயங்கியல் பற்றி ஆராய்கிறது. சுயமும் மற்றயவையும் இரு எதிர் நிலைகளாகும். எதிர் நிலைகள் என்பது விடயங்கள் ஒன்றை ஒன்று அர்த்தமுடையதாக்குவதற்கு இன்றியமையாததாகும். இயங்கியலின் ஒருபடிநிலையான இது இயங்கியலின் முக்கிய இயல்புமாகும். இவ்வாய்வு சுயம் பற்றிய லகானுடைய கருத்தாக்கம் கட்டமைக்கப்படுவதில் இயங்கியல் முறையின் இயல்பு காணப்படுகின்றது என வாதிப்பதுடன் சுயத்தைக் கட்டமைப்பதிலுள்ள மொழியின் இன்றியமையாமையையும் கோடிட்டுக் காட்டுகிறது. மேலும் இவ்வாய்வு விபரிப்பு முறை மற்றும் விமர்சன முறை என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

***பிரதான சொற்பதங்கள்:*** *சுயம், மற்றமை, இயங்கியல், எதிர் நிலைகள்.*

## அறிமுகம்

உளவியல் அறிஞரான ஜாக்ஸ் லக்கான் (1901-1981) தனக்கு முந்திய உளவியல் அறிஞரான சிக்மன் பிராய்ட் உடைய உளவியல் கோட்பாட்டை மறு வாசிப்புக்குட்படுத்தியவராகக் கருதப்படுகிறார். இவருடைய ஆய்வு மனிதத் தன்னிலை (Subject) அல்லது 'சுயம்' பற்றிய ஒரு புதிய கருத்தாக்கத்தை உளவியலுக்கு வழங்கியது. 'சுயம்' என்பது குழந்தை ஒன்று மொழியெனும் குறியீட்டு உலகிற்குள் நடமாடத் தொடங்கிய பிறகுதான் உருவாகிறது எனவும் தன்னை பிறவற்றிலிருந்து அடையாளம் காண்பதற்குத் தேவையான சுயம் மொழி மூலம்தான் குழந்தைக்குக் கிடைக்கிறது எனவும் அவர் விளக்கினார். இதன்வளியில் "'சுயம்' என்பது உண்மையில் நமக்குள் ஏற்கனவே இருக்கும் விடயம் அல்ல. மாறாக அது மற்றமையால் கட்டமைக்கப்படுவது" என்பதை லக்கான் எண்பிக்க முயன்றார்.

இயக்க விதிகளின்படி, மாற்றம், வளர்ச்சி, கட்டமைப்பு போன்ற இயக்கத்திற்கு, இன்றியமையாதது எதிர்நிலைகளும் முரண்பாடுகளுமாகும்.

இதன்படி சுயம், மற்றமை என்ற இரண்டும் இரண்டு எதிர்நிலைகளாகும். குழந்தை ஒரு பௌதீகப் பொருளாகப் பிறப்பதற்கு முன்னமே மற்றமை உள்ளது. அது தன்னுடைய பௌதீக நிலையைத் தொடர்ந்த அடுத்த கட்டமான உளநிலை அல்லது கருத்து நிலையான 'சுயம்' என்பதைக் கட்டமைத்துக் கொள்வதற்கு, அதனுடனான மற்றமையின் ஊடாட்டம் அவசியமாகிறது. எனவே முதலில் குழந்தையும் மற்றமையும் போன்ற பௌதீக எதிர்நிலைகள், பின்னர் அவ்வெதிர் நிலைகளிலிருந்து சுயம், மற்றமை என்ற கருத்துநிலைகள் என உளம் விருத்தியடைகிறது.

எவ்வாறு குழந்தை உடல், தாய் தந்தை என்ற மற்றமை இல்லாமல் சாத்தியம் இலலையோ அதேபோல அதனுடைய சுயமும் மற்றமையில்லாமல் சாத்தியம் இல்லை. இது இயக்கவியல் விதியாகும். அதாவது தாயும் தகப்பனும் என்ற எதிர்நிலகளின் ஊடாட்டம் குழந்தையின் பிறப்பாக அமைய குழந்தையும் மற்றமையும் என்ற பௌதிக எதிர்நிலைகளின் புலன்களினுடனான ஊடாட்டம் சுயத்தின் கட்டமைப்பு அல்லது உளவிருத்தியாகும்.

**கருதுகோள்**

சுயத்தின் கட்டமைப்புப் பற்றி லக்கானால் பேசப்பட்ட கருத்துக்களை ஆழ்ந்து நோக்கிறபோது அதனை இயக்கவியல் அம்சமாக இலகுவில் கண்டுகொள்ள முடியும். அதாவது சுயம் கட்டமைக்கப்படுவது பற்றிய லகானுடைய கருத்தாக்கத்தில் இயங்கியல் முறைமையின் இயல்பு காணப்படுகின்றது.

**நோக்கம்**

பின்நவீனத்துவ சிந்தனை மரபுச் சிந்தனையாளர்களில் ஒருவராகக் காணப்படும் லக்கானுடைய உளவியல் கண்ணோட்டம், உளவியலின் தந்தையாக வர்ணிக்கப்படுகின்ற சிக்மன் பிரைய்டின் உளம் பற்றிய அடிப்படைச் சிந்தனைகள் மீது பெரும் தாக்கத்தை எற்படுத்தியதாக துறைசார் அறிஞர்கள் கருதுவர். இந்தவகையில் லக்கானுடைய கருத்தில் 'சுயம் கட்டமைக்கப்படுவது' பற்றிய புரட்சிகரமான சிந்தனைகள் பற்றித் தெளிவு பெறுவதையும், மெய்யியல் வரலாற்றில் ஆரம்பகாலம் முதல் பேசப்பட்டு வந்திருக்கின்ற இயங்கியல் முறை எவ்வாறு லக்கானுடைய உளம் பற்றிய சிந்தனையில் அமைந்து காணப்படுகின்றது என்பதை விளக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு விபரிப்பு முறை மற்றும் விமர்சன முறை என்பனவற்றின் அடிப்படையில் இடம் பெற்றிருப்பதோடு இவ்வாய்வுக்கான தரவுகள் இரண்டாம் நிலை தரவுகளான லக்கானுடைய நூல்கள், லக்கானிய சிந்தனைகள் பற்றிய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் விடயம் தொடர்பான இணையக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டு இருக்கின்றன.

**முடிவுரை**

விவாதங்களின்படி, லக்கானுடைய கண்ணாடிக் கோட்பாடு மற்றும் கற்பனை (Image), குறியீடு (Symbol), உண்மை (Real) பற்றிய விடயங்கள் 'நான் என்பது எனக்குள் இல்லை எனக்கு வெளியே இருக்கிறது' என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இது பிரைய்ட் போன்ற உளவியலாளர்களின் கருத்திற்கு

எதிரானதாகும். இது 'சுயம்' என்பது மற்றமைகளால் கட்டமைக்கப்படுவதைக் குறிக்கிறது. இவ்வாறான லக்கானின் உளவியல் பகுப்பாய்வில் மற்றமை, மொழி என்பன குழந்தைப் பிறப்பிற்கு முன்னமே உள்ள விடயங்களாகக் கூறப்படுவதுடன், இம்மற்றமைமீது மொழித்தன்மையிலான குழந்தையின் ஊடாட்டம் மெல்ல மெல்ல அவனுடைய சுயத்தைக் கட்டமைக்கிறது எனவும் அமைகிறது.
இவ்விவாதத்திலுள்ள சுயம், மற்றமை என்பன பின்நவீனத்துவம் முன்வைக்கும் இரட்டை எதிர்நிலைகளாக, மையம் - விழிம்பு நிலை என்பவைகளாக பார்க்கப்படுவது போல இயங்கியல் முறையின் எதிர் நிலைகளாகவும் கருதப்பட முடியும். இதில் இயங்கியல் முறையின் கூறுகள் அப்படியே பினபற்றப்பட்டுள்ளது.

## References


Lacan, J., (1989), *Ecrits*: A Selection, London and Newyork.

Lacan, J., (1998), *The Seminars of Jacques Lacan*, Seminar – I, II.

Fredric, J., (1984), *Post Modernism or the Cultural Logic of late capitalism*, Duke University Press, Durham.

Richard, S., (1978), *After Post Modernism Education Political and Indentity*, the Falmer Press, Washington D.C.

Donnnell, K., (2010), *Post Modernism*, Lion Publishing, Oxford England.

W.W.W. lacanonline. Com.

www.english hawai. edu critical link lacan

இரவிச்சந்திரன், தி., (2007), *ப்ராய்ட், யூங், லக்கான்*: அறிமுகமும் நெறிமுகமும், மணி ஒப்செட் சென்னை 05.

சுரேஷ், எம். ஜி., (2009), *பின்நவீனத்துவம் என்றால் என்ன?*, மணி ஒப்செட் சென்னை 05.